NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu,* Front page
**Date:** 2 February 2015

## இம்மாதம் தாக்கல் செய்யப்படவுள்ள பட்ஜெட்–2015 பற்றி தர்மன்

# எல்லா சிங்கப்பூரரின் தேவைகளிலும் கவனம்

இம்மாதம் சமர்ப்பிக்கப்பட உள்ள வரவு செலவுத் திட்ட அறிக்கையில் (பட்ஜெட்) எல்லா சிங்கப்பூரர்களின் தேவைகளும் கவனிக்கப்படும் என்று நிதி அமைச்சர் தர்மன் சண்முகரத்னம் தெரிவித்து உள்ளார்.

"முதியோருக்கு போதுமான ஓய்வுகாலத் தேவைகளைக் கவனிக்கக்கூடியதாக பட்ஜெட்–2015 அமையலாம். அதே நேரம் இளையருக்கும் நடுத்தர வயதுப் பிரிவினருக்கும் நல்ல வாழ்க்கைத் தொழிலுக்கு உறுதி செய்வது பற்றியும் இப்பட்ஜெட் கவனத்தில் கொள்ளக்கூடியதாக இருக்கும்," என்றார் துணைப் பிரதமருமான திரு தர்மன்.

குறிப்பாக, சிங்கப்பூரின் பொன் விழா ஆண்டின் வரவு– செலவுத் திட்டம் என்பதால் சிங்கப்பூரரின் இன்றைய தேவைகளோடு வருங் காலத் தேவைகளும் கவனிக்கப்படும் என்றார் அவர்.

தாமான் ஜூரோங்கில் நேற்று நடந்த சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழக ஆண்டுக் கொண்டாட்டத்தில் பங்கேற்க வந்த திரு தர்மன், செய்தியாளர்களிடம் பேசினார். கடந்த ஆண்டு தேசிய தினப் பேரணியில் பிரதமர் லீ சியன் லூங் அறிவித்த முதியோர் ஆதரவுத் திட்டத்திற்கு (Silver Support Scheme) முழு வடிவும் தரக்கூடிய கடைசிக்கட்டப் பணிகளில் அரசாங்கம் ஈடுபட்டு வருவதாகவும் அவர் சொன்னார்.

கடந்த காலத்தில், குறிப்பாக கடந்த ஐந்தாண்டுகளில் அரசாங்கம் செய்து வந்ததன் தொடர்ச்சியாகவும் பட்ஜெட் அமையும் என்றார் நிதி அமைச்சர்.

"சிங்கப்பூரின் சமூக, பொருளியல் தோற்றத்தில் குறிப்பிடத்தக்க உருமாற்றம் செய்வதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துள்ளது. குறைந்த, நடுத்தர வருமானப் பிரிவினருக்கான வீடமைப்பு, சுகாதாரக் கவனிப்பு ஆகியவற்றோடு தாக்குப்பிடித் தலை வலுவாக்குதல் ஆகியன இதில் அடங்கும்," என்று தெரிவித்தார் அவர்.

நடப்பாண்டுக்கான வரவு– செலவுத் திட்ட அறிக்கையை இம்மாதம் 23ஆம் தேதி நாடாளு மன்றத்தில் தாக்கல் செய்து உரையாற்ற உள்ளார் திரு தர்மன்.

சிங்கப்பூர் தேசியப் பல்கலைக் கழகம் (என்யுஎஸ்) தனது 110ஆவது ஆண்டுக் கொண்டாட்டத்தை முன்னிட்டு சமூக நடவடிக்கை ஒன்றை நேற்றுக் காலை தொடங்கியது.

பல்கலைக்கழகத்தின் பேராசிரியர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் மாணவர்கள் ஒன்றாக இணைந்து சமூகப் பிரச்சினைகளைக் கண்டறிந்து தீர்வு காணக்கூடிய இந்நடவடிக்கை 'என்யுஎஸ் கேர்ஸ்' என்றழைக்கப்படும்.

தீர்வுக்கான தளம் என்று இதனைக் குறிப்பிடலாம் என்றார் என்யுஎஸ் தலைவர் டான் சோர் சுவான்



'என்யுஎஸ் கேர்ஸ்' சமூகத் திட்டத்தின் ஒரு பகுதியாக திருமதி வனிதா ராமசாமி, 67, என்பவரை துணைப் பிரதமரும் நிதி அமைச்சருமான தர்மன் சண்முகரத்னம், சிங்கப்பூர் தேசியப் பல்கலைக் கழக மருத்துவமனை மருத்துவர் கிரேஸ் சியாங் ஆகியோர் சந்தித்து தேவைகள் பற்றிப் பேசினர். **படம்: ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்**

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.